# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, களரிகளுக்கு உரிமமளித்தல் (திருத்த)ச் சட்டம்

---

*[1987, செப்தெம்பர் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---


*1987, ஒற்றோபர் மாதம் 02 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 90* *தபாற் செலவு : சதம் 75*

1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, களரிகளுக்கு உரிமமளித்தல் (திருத்த)ச் சட்டம்

[1987 செப்தெம்பர் 30 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 17/86

## 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, களரிகளுக்கு உரிமமளித்தற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

குறுக்கப் பெயர்.

1. இச்சட்டமானது 1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, களரிகளுக்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும், 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, களரிகளுக்கு உரிமமளித்தற் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவில் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ), (ஆ), (இ) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் :—

"(அ) உரிமம் வழங்கப்படவேண்டிய களரியின் வளவுகள் எப்பிரிவில் அமைந்துள்ளனவோ, அப்பிரிவின் அரசாங்க அதிபரினூடாக உள்ளூரதிகார சபையின் தவிசாளருக்கு மும்பிரதிகளில் அனுப்பப்படுதல் வேண்டும்;

(ஆ) பொருளளவில் இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்;

(இ) செயலாளரினால், தலைவரினால் அல்லது முகாமையாளரினால் உண்மைப் பிரதியொன்று என முறையாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட, களரியின் விதிகளின் பிரதியொன்று, 5 ஆம் பிரிவின்கீழ் விலக்களிப்புக் கோரப்படுமிடத்துத் தவிர தோதான உரிமக் கட்டணத்துடனும், ஐம்பது ரூபா கொண்ட விண்ணப்பக்கட்டணத்துடனும் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்; அத்துடன்"; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் :—

"(2அ) (1) களரியொன்று தனது செயற்பாடுகளைக் கொண்டுநடத்துவதற்குக் கருதியுள்ள வளவுகளானவை ஏதேனும் சமய வழிபாட்டிற்குரிய இடத்திலிருந்து, பாடசாலையிலிருந்து அல்லது ஆசுபத்திரியிலிருந்து இருநூற்றைம்பது மீற்றர்களுக்குள் அமைந்திருக்குமாயின், இவ்வுட்பிரிவானது எத்தேதியன்று நடைமுறைக்கு வருகின்றதோ அத்தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் அமைக்கப்பட்ட களரியொன்று தொடர்பாக, உரிமமெதுவும் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படுதலாகாது.

2—ஃ 006903—2,820 (04/87)

(2) களரியொன்று, அது, சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டதாக அல்லது பாராளுமன்றச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டதாக இருந்தாலொழிய, இவ்வுட்பிரிவு நடைமுறைக்குவருகின்ற தேதியிலிருந்தும் அதற்குப் பின்னரும், அது அத்தகைய தேதிக்கு முன்னர், அத்தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் உருவாக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, அக்களரி தொடர்பாக, இச்சட்டத்தின்கீழ் உரிமமெதுவும் வழங்கப்படவோ அல்லது புதுப்பிக்கப்படவோ ஆகாது :

ஆயின், இவ்வுட்பிரிவு நடைமுறைக்கு வரும் தேதிக்குப் பின்னர், களரியொன்றின் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் முதலாவது புதுப்பித்தலுக்கான விண்ணப்பமொன்றை அத்தகைய களரி அவ்வாறு பதியப்படவோ அல்லது கூட்டிணைக்கப்படவோ இல்லையென்ற நிகழ்வு எப்படியிருப்பினும், அத்தகைய முதலாவது புதுப்பித்தல் விண்ணப்பத் தேதியிலிருந்து ஓராண்டு காலத்துக்குள் சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் தன்னைத்தானே பதிந்துகொள்ளவோ அல்லது பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் தன்னைத்தானே கூட்டிணைத்துக்கொள்ளவோ வேண்டுமென்ற நிபந்தனைக்கமைய உள்ளூரதிகார சபையொன்று அனுமதிக்கலாம்.

(2ஆ) இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்று செய்யப்பட்டிருக்குமிடத்து, களரியானது அதன் செயற்பாடுகளை எவ்வளவுகளில் கொண்டுநடாத்துகின்றதோ அல்லது எவ்வளவுகளில் கொண்டுநடாத்தக் கருதுகின்றதோ, அவ்வளவுகளில் அத்தகைய நிகழ்வைக் குறிப்பிடும் விளம்பரப் பலகையொன்றை, விண்ணப்பகாரர் நிறுவச்செய்வித்தல் வேண்டும். அத்துடன் அவ்விண்ணப்பம் தொடர்பான இறுதி முடிவொன்று ஆக்கப்பட்டு விண்ணப்பகாரருக்குத் தெரிவிக்கப்படும்வரை அத்தகைய விளம்பரப் பலகையை அகற்றுதல் ஆகாது. அத்துடன் விண்ணப்பகாரர் இவ்வுட்பிரிவில் தேவைப்படுத்தப்பட்டவாறு, அத்தகைய விளம்பரப் பலகையொன்றை நிறுவுதலைச் செய்விக்கத் தவறுமிடத்து அவர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிபவராகிறார்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவானது, அப்பிரிவுக்கான காப்பு வாசகத்துக்குப் பதிலாகப் பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"ஆயின், எவ்வாறிருப்பினும், அவ்வாறு விதித்துரைக்கப்படும் கட்டணங்கள், பின்வரும் வரையறைகளுக்கு மேற்படுதலாகாது :—

| | ரூபா |
|---|---|
| (அ) ஏதேனும் மாநகரசபையின் விடயத்தில் ... | 5000 |
| (ஆ) ஏதேனும் நகரசபையின் விடயத்தில் ... | 2000 |
| (இ) ஏதேனும் அபிவிருத்திச் சபையின் அல்லது பிரதேச சபையின் விடயத்தில் ... | 500" |

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது, அப் பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(அஅ) (i) சமூக அல்லது பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட களரியொன்று தொடர்பில், சமூகசேவைகள் பணிப்பாளருக்கும் ;

(ii) கலாச்சார அல்லது சமய சம்பந்தமான நோக்கங்களுக்கான களரியொன்று தொடர்பில், கலாச்சார அலுவல்கள் பணிப்பாளருக்கும் ; அத்துடன்

(iii) ஏதேனும் விளையாட்டு சம்பந்தப்பட்ட செயற்பாடு நோக்கத்துக்காக அமைக்கப்பட்ட களரியொன்று தொடர்பில், விளையாட்டுத்துறைப் பணிப்பாளருக்கும்,

விண்ணப்பத்தின் பிரதியொன்று அனுப்பப்படுதல் வேண்டும். அவர்கள், அத்தகைய பிரதியைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து நான்கு கிழமைகளுக்குள், களரியின் நன்னேக்குப்பற்றித் தவிசாளருக்கு அறிக்கையொன்றைச் செய்தல் வேண்டும் ;".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது, "மதுவரி ஆணையாளர் அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மதுவரி ஆணையாளர், சமூகசேவைகள் பணிப்பாளர், கலாசார அலுவல்கள் பணிப்பாளர், விளையாட்டுத்துறைப் பணிப்பாளர், அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவானது, "பொலிசுக் கண்காணிப்பாளரினல் அல்லது மதுவரி ஆணையாளரினல் செய்யப்படும்..." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பொலிசுக் கண்காணிப்பாளரினல், மதுவரி ஆணையாளரினல், சமூக சேவைகள் பணிப்பாளரினல், கலாச்சார அலுவல்கள் பணிப்பாளரினல் அல்லது விளையாட்டுத்துறைப் பணிப்பாளரினல்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்தின்கீழ் எந்த வளவு தொடர்பில் உரிமம் வழங்கப்பட்டதோ, அந்த வளவுகளுக்குப் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவ்வளவுகள் மீது களரியானது அதன் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துகின்றதோ அல்லது கொண்டு நடாத்தக் கருதுகின்றதோ அவ் வளவுகள் பின்வருவனவற்றுக்கு இசைந்தொழுகினலன்றி, இவ்வுட்பிரிவானது நடைமுறைக்கு வருந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்றை வழங்குவதற்கான அல்லது புதுப்பித்தலுக்கான விண்ணப்பமெதுவும் அனுமதிக்கப்படுதலாகாது :—;" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் :—

"(ஓ) பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களினதும், அவர்களைச் சேர்ந்த விருந்தினர்களினதும் வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள், போதுமான அளவில் களரியின் வளவுகளுக்குள் ஏற்பாடுசெய்யப்படுதல் வேண்டும்;"; அத்துடன்

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் :—

"(2) எக்களரி தொடர்பாக இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அக்களரியின் வளவுகள், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுகவில்லையெனத் தவிசாளருக்குத் தோன்றுமிடத்து, அவர், அத்தகைய களரியின் தலைவருக்கு, செயலாளருக்கு அல்லது முகாமையாளருக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுப்பதன்மூலம் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னர் அத்தகைய அறிவித்தலோடு இணங்கியொழுகுவதற்குத் தேவையான எல்லா நடபடிகளையும் எடுக்குமாறு அத்தகைய தலைவரை, செயலாளரை அல்லது முகாமையாளரைத் தேவைப்படுத்தலாம். தவிசாளர், தனது தற்றுணிபின்மேல், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியை நீடிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட களரியொன்றின் விதிகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எக்களரி தொடர்பாக இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்றை வழங்குவதற்கான அல்லது புதுப்பித்தலுக்கான விண்ணப்பமொன்று செய்யப்பட்டுள்ளதோ அக்களரியின் விதிகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.";

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ), (எ) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் :—

"(ஊ) களரியின் வளவுகள் திறக்கப்படும், மூடப்படும் நாட்களும், நேரங்களும் ;

(எ) பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களோடு சேர்ந்து களரிக்கு வருகின்ற விருந்தினர்களுக்கெனப் பேணப்படும் இடாப்பில் அவ்விருந்தினர்களைப் பதிவுசெய்தல் ; அத்துடன்

(ஏ) விதிகளை மாற்றும் முறை.";

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "உரிமம் அளிக்கப்படும் நேரத்தில், களரியொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எக்களரி தொடர்பில் உரிமமொன்றை வழங்குவதற்கான அல்லது புதுப்பித்தலுக்கான விண்ணப்பமொன்று, இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்டுள்ளதோ அக்களரியொன்று" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ; அத்துடன்

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் :—

" (3) எக்களரி தொடர்பில் உரிமமொன்றை வழங்குவதற்கான அல்லது புதுப்பித்தலுக்கான விண்ணப்பமொன்று, இச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்டுள்ளதோ அக்களரியொன்று, (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சில விடயங்களை மட்டும் தொடர்பான ஏற்பாடுகளைக்கொண்ட விதிகளை உடையதாயிருக்குமிடத்து, தவிசாளர், விண்ணப்பத்தின்மீது, திருத்தப்பட்டவாறான அத்தகைய விதிகள் அத்தகைய எல்லா விடயங்களும் தொடர்பான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கத்தக்கதான அத்தகைய முறையில், உளதாயுள்ள விதிகளைத் திருத்துவதற்குத் தனது தற்றுணியில், கால அவகாசம் வழங்கலாம்.

(4) களரியின் தலைவர், செயலாளர் அல்லது முகாமையாளர் (3) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட காலத்தினுள், (3) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக விதிகளைத் திருத்துதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு திருத்தப்பட்டவாறான விதிகளின் பிரதியொன்றைத் தவிசாளருக்கு அனுப்புதலும் வேண்டும்.

(5) களரியின் தலைவர், செயலாளர் அல்லது முகாமையாளர் (4) ஆம் உட்பிரிவில் தேவைப்படுத்தப்பட்டவாறு விதிகளைத் திருத்தி அவற்றைத் தவிசாளருக்கு அனுப்பத் தவறுமிடத்து, அத்தகைய களரி தொடர்பில், உரிமம் வழங்கப்படுவதற்கான அல்லது புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் அனுமதிக்கப்படுதலாகாது.".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவானது நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"மதுவரிக் கட்டளைச் சட்டம் முதலியவற்றின் ஏற்புடைமை.

21. மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் அல்லது அது சார்பில் ஏற்புடைத்தான வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக, அல்லது அவ்வேற்பாடுகளுக்கிணங்கவல்லாது வேறு வகையாக, போதையூட்டும் குடிவகை எதனையும் எவையேனும் களரி வளவுகளினுள் வைத்திருப்பதை, விற்பதை, வழங்குவதை, அல்லது உட்கொள்வதை இச்சட்டத்தின்கீழான உரிமமொன்று எவ்வகையிலேனும் அதிகாரமளிப்பதாக அல்லது அனுமதிப்பதாகக் கருதப்படுதலாகாது என்பதுடன், இச்சட்டத்தின்கீழ் உரிமம் வழங்கப்பட்ட ஏதேனும் களரியில், அக்களரியின் உறுப்பினராகப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவருக்கு அல்லாது வேறு ஆளுக்குப் போதையூட்டும் குடிவகை வழங்கப்படுதலும் ஆகாது :

ஆயின், எவ்வாறுயினும், களரியின் பதிவுசெய்யப் பட்ட எவரேனும் உறுப்பினர் அவருடன் விருந்தினர் எவரையும் களரிக்கு அழைத்துவருமிடத்து, களரியின் விதிகளுக்கிணங்கப் பேணப்படும் விருந்தினர் இடாப் பில் அவரது பெயர் முறையாகப் பதிவுசெய்யப்பட் டதன்மேல், அத்தகைய விருந்தினருக்குப் போதை யூட்டும் குடிவகை வழங்கப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 23அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

10. பின்வரும் புதிய பிரிவானது, 23 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 23அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"23அ. இச்சட்டத்தின்கீழ் உரிமம் பெற்ற களரியொன்றின் வளவுகளில் ஏதேனும் ஒழுங்கற்ற, பலாத்காரமான, சச்சரவுக்குரிய அல்லது குழப்பமான நடத்தையை, அறிந்துகொண்டு அனுமதிக்கும், அத்தகைய களரியின் தலைவர், செயலாளர் அல்லது முகாமையாளர், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு, அப்பிரிவிலுள்ள "உள்ளூரதிகாரசபை" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"உள்ளூரதிகார சபை" என்பது ஏதேனும் மாநகர சபை, நகரசபை, அபிவிருத்திச் சபை அல்லது பிரதேச சபை எனப் பொருள்படும் ;".

## அட்டவணை

.............................. மாநகர/நகர/அபிவிருத்திச் சபை/பிரதேச சபை*

1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, களரிகளுக்கு உரிமமளித்தற் சட்டம்

களரியொன்றை நடாத்துவதற்கு உரிமமொன்றைப் பெறுவதற்கான

### விண்ணப்பம்

(களரியின் வளவு எந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ளதோ அந்த உதவி அரசாங்க அதிபரினூடாக, மாநகர சபையொன்றின் விடயத்தில் மாநகர முதல்வருக்கு அல்லது நகரசபையொன்றின், அபிவிருத்திச் சபையொன்றின் அல்லது பிரதேச சபையொன்றின் விடயத்தில் தவிசாளருக்கு முப்பிரதிகளில் அனுப்பப்படுதல் வேண்டும்.)

1. விண்ணப்பகாரரின் பெயர் :————.
2. விண்ணப்பகாரரின் வதிவிட முகவரி :————.
3. தலைவர், செயலாளர் அல்லது முகாமையாளர் என்ற எத்தன்மையில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது :————.
4. களரியின் பெயர் :————.

5. களரியின் அமைவிடம் :————.

6. களரியின் செயற்பாடுகள் :————.

7. செயற்பாடுகள் புரியப்படுகின்ற இடம் :————.

8. பின்வருவோரின் பெயர்களும், வதிவிட முகவரிகளும் :—
தலைவர் :————.
செயலாளர் :————.
முகாமையாளர் :————.

9. உறுப்பாண்மை :—
பொதுவானதா/இணையானதா/கௌரவமானதா * :————.

10. களரியின் வளவு சட்டத்தின் 16 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுகுகின்றதா :————.

11. களரியின் விதிகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எல்லாக் கருமங்களும் தொடர்பான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்றனவா, (தயவுசெய்து, களரியின் விதிகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இணைக்கவும்) :

12. பிரிவு 2(2அ) என்பதன் கீழான தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளனவா :————.

13. களரி வளவுகளில் மதுபானச்சாலையொன்று உள்ளதா அல்லது மதுபானம் அங்கு வழங்கப்படுகின்றதா, அவ்வாறாயின் அந்நோக்கத்துக்காக உரிமம்/அனுமதிப்பத்திரம் ஒன்று மதுவரி அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டுள்ளதா :————.

14. சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் உரிமக் கட்டணத்திலிருந்து விலக்களிப்புகள் கோரப்படுகின்றனவா. (5 ஆம் பிரிவின் எப்பந்தியின்கீழ் அத்தகைய விலக்களிப்பு நாடப்படுகின்றது என்பதைக் குறித்துக்காட்டுக. அத்துடன் தொடர்பான ஆதாரப்படுத்தும் ஆவணங்களை இணைக்கவும்) :————.

மேலே சொல்லப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

————
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி :————.
இடம்:————.

என் முன்னிலையில்

————
சமாதான நீதிவான்

உதவி அரசாங்க அதிபரின் அறிக்கை (களரியின் செயற்பாடுகள், வழங்கப்பட்ட வசதிகள், உறுப்பாண்மை முதலியன தொடர்பாக தகுந்த நுண்ணாய்வின் பின்னர் அறிக்கையொன்றைச் செய்யும்படி உதவி அரசாங்க அதிபர் வேண்டப்பட்டுள்ளார்.)

(*ஏற்புடையனவல்லாதவற்றை நீக்கிவிடவும்)

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*